# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2010 - 2011

## தமிழ்மொழி - ஆண்டு 8

சுட்டெண்:................................................ நேரம்: 150 மணித்துளிகள்

**1) கீழ்வரும் வினாக்களுக்கு மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, விடைக்கான எழுத்துக்குரிய கூட்டில் புள்ளடியிடுக.**

1. காளமேகப்புலவர் குடித்த மோருக்கு மற்றொரு பெயர்
   அ) தயிர் ஆ) கார் இ) மோர் ஈ) சீர்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. எத்திசையில் விடிவெள்ளி எழும்?
   அ) கிழக்கு ஆ) வடக்கு இ) தெற்கு ஈ) மேற்கு

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. தாய் தன் பிள்ளையை மகளே! வா என அழைத்தாள். மகளே! என்ற சொல்லில் இடம்பெற்றுள்ள வேற்றுமை
   அ) முதலாம் வேற்றுமை ஆ) நாலாம் வேற்றுமை
   இ) எட்டாம் வேற்றுமை ஈ) வேற்றுமை இல்லை.

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. இடிஇடித்து இருண்டு கொண்டல் காற்றோடு மழை பொழியும் முகில்
   அ) காளமேகம் ஆ) இடிமேகம் இ) நீலமேகம் ஈ) மழைமேகம்

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. ஆ மேய்க்கும் இடையர்குலப் பெண்ணை இப்படி அழைப்பர்.
   அ) குறத்தி ஆ) உழத்தி இ) மேய்ச்சி ஈ) ஆய்ச்சி

   அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. தமிழ்மொழியின் இனிமை கருதி, அதை இவ்வாறு அழைப்பர்

அ) பைந்தமிழ் ஆ) செந்தமிழ் இ) கனித்தமிழ் ஈ) தீந்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. எழுபத்தைந்தாம் ஆண்டில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) பவளவிழா இ) வைரவிழா ஈ) மணிவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. அறிஞர் கூடி ஒருவரையொருவர் எதிர்த்துக் கருத்துரைக்கும் அரங்கு

அ) அறமன்றம் ஆ) பொதுமன்றம் இ) பட்டிமன்றம் ஈ) தமிழ்மன்றம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இயற்றமிழ் என்பது

அ) உரைநடையும் பாட்டும் ஆ) இசையும் பாட்டும்

இ) இசையும் நாடகமும் ஈ) பாட்டும் நாடகமும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. இலை புதிதாய்த் தோன்றிய நிலை

அ) பழுப்பு ஆ) தளிர் இ) கொழுந்து ஈ) குருத்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. இன்று எமக்குக் கிடைத்துள்ள இலக்கியங்கள் இக்காலத்தவை

அ) கடைக்கழகம் ஆ) இடைக்கழகம் இ) முதற்கழகம் ஈ) இக்காலக்கழகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. கிறித்தவ இறையன்பு இலக்கியங்களில் ஒன்று

அ) தேவாரம் ஆ) சீறாப்புராணம் இ) திருக்குறள் ஈ) இயேசுகாவியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. எழுவாய் பயனிலை செயப்படுபொருள்களை விளக்கும் சொல்லிய உறுப்பு

அ) உவமைமொழி ஆ) அடைமொழி இ) தனிமொழி ஈ) பொதுமொழி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. இறுதியாக வன்னியை ஆண்ட மன்னன்

அ) கயிலைவன்னியன் ஆ) காக்கைவன்னியன்

இ) பண்டாரவன்னியன் ஈ) கதிரைவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. நேருக்கு நேர்நின்று போரிடும்போது ஏற்படும் புண்

அ) விழுப்புண் ஆ) நேர்ப்புண் இ) வீரப்புண் ஈ) போர்ப்புண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பண்டாரவன்னியனை மாற்றார்க்குக் காட்டிக்கொடுத்தவன்

அ) காக்கைவன்னியன் ஆ) இலக்சன் கதிர்காமர்

இ) கதிர்காமநாயகம் ஈ) பனங்காமவன்னியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. தமிழினியன் தாயகம் சென்று, உறவுகளுக்கு உதவினான். இச்சொல்லியம்

அ) தனிச்சொல்லியம் ஆ) கூட்டுச்சொல்லியம்

இ) கலப்புச் சொல்லியம் ஈ) கூட்டுக்கலப்புச் சொல்லியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வீட்டின் எல்லையுள் கொல்லைகளிலும் காணப்படாத மலர்

அ) முல்லை ஆ) செவ்வந்தி இ) கொடிமல்லிகை ஈ) காட்டுமல்லிகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. தாமரை பூக்க, அல்லி தலைதூக்க, மல்லிகையோடு செவ்வந்தி பூக்கள் மலிந்த காலம்

அ) கோடைகாலம் ஆ) கார்காலம் இ) பனிகாலம் ஈ) இக்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. இடைச்சொற்களில் அன் ஆன் அர் உம் போன்றவை

அ) பகுதிகள் ஆ) விகுதிகள் இ) இடைநிலைகள் ஈ) உரிச்சொற்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. சாரியைகளுக்குச் சரியான எடுத்துக்காட்டு

அ) உறு தவ ஆ) தான் தோறும் இ) ஆல் ஒடு ஈ) அத்து அற்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. ஊரார் கொடுக்கும் செல்லத்தில் செருக்கொடு மலரும் பூஞ்செடி

அ) மல்லிகை ஆ) செவ்வந்தி இ) முல்லை ஈ) நீலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. ஔவையாருக்கு நெல்லிக்கனி தந்தவன்

அ) எல்லாளன் ஆ) அதியர்மான் இ) சங்கிலியன் ஈ) கதிரவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. ஆய்ச்சியரின் கைக்கு வந்த பின் கார் பெற்ற பெயர்

அ) நீர் ஆ) வார் இ) பேர் ஈ) மோர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. ஐந்தாம் வேற்றுமைக்குச் சரியான உருபுகள்

அ) கண் இடம் ஆ) இல் இன் இ) ஆல் ஒடு ஈ) அது உடைய

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. அதியர்மான் வெளிநாட்டிலிருந்து தமிழகத்துக்குக் கொண்டு வந்த பயிர்

அ) கரும்பு ஆ) இறுங்கு இ) சோளம் ஈ) கோதுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. உள்ளத்தை உருக்கி, இசைய வைத்து இன்பம் தரும் தமிழின் பிரிவு

அ) நாடகம் ஆ) இசை இ) இயல் ஈ) முத்தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. சீவகசிந்தாமணி என்ற காப்பியத்தை எழுதியவர்

அ) திருத்தக்கதேவர் ஆ) இளங்கோவடிகள்

இ) சீத்தலைச்சாத்தனார் ஈ) தொல்காப்பியர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. மா + கன்று இதைப் புணர்த்தினால்

அ) மாக்கன்று ஆ) மாகன்று இ) மாங்கன்று ஈ) மாங்க்கன்று

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. அப்பா அமெரிக்காவில் இருக்கிறார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) ஐந்தாம் வேற்றுமை ஆ) ஏழாம் வேற்றுமை

இ) எட்டாம் வேற்றுமை ஈ) வேற்றுமை இல்லை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

(புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஏறத்தாழ நானூற்றைம்பது ஆண்டுகள் மூன்று ஐரோப்பிய இனத்தவர்கள் இலங்கையை மாறிமாறி ஆண்டனர். முதலில் போர்த்துக்கேயர் வந்தனர். இவர்கள் நூற்றைம்பது ஆண்டுகாலம் ஆண்டனர். போர்த்துக்கேயர் மிகவும் கொடியவர்கள். மக்களைக் கடுமையாகக் கொடுமைப்படுத்தி அடக்கி ஆட்சி நடத்தினர். தங்கள் மதத்தைப் பரப்புவதற்காகக் கோவில்களை இடித்து அழித்தனர். மிகுபண்டைப் புகழ் வாய்ந்ததும் கலைவண்ணத்தால் திகழ்ந்த திருக்கோணேச்சுரத்தையும் இன்னும் பல கோவில்களையும் இடித்தனர். வாழையிலையில் உணவு உண்ணக்கூடாது என்று சட்டமிட்டனர் மீறி உணவு உண்டாலோ தண்டித்தனர். இவ்வாறு கொடுங்கோன்மை செய்து கொண்டிருந்த போர்த்துக்கேயரைப் போரில் வென்று ஒல்லாந்தர் ஆட்சியைக் கைப்பற்றினர். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப் போன்று கொடுமையாக நடந்துகொள்ளவில்லை. அவர்கள் மக்களுடன் மென்போக்கையே கடைப்பிடித்தனர். மதவெறியைக் கொண்டிராமல் இறைவழிபாட்டு உரிமையை வழங்கினர். போர்த்துக்கேயரைப் போலன்றி அரசவுயர் பொறுப்புகளில் உள்நாட்டவரை அமர்த்தினர். இதன்பின் ஆங்கிலேயர் ஒல்லாந்தரை வென்று, ஆட்சியைக் கைப்பற்றினர். இவர்கள் ஒல்லாந்தரை விடவும் நல்லவர்களாக நடந்து கொண்டனர். இவர்கள்தான் ஆட்சி வசதிக்காக சிங்களம் - தமிழீழம் என்ற இருநாட்டையும் ஒன்றாக இணைத்தவர்கள். இந்த இணைப்பே தமிழினத்தைச் சாகடிக்கும் தூக்குக் கயிறாயிற்று.

1. இலங்கையை ஆண்ட மூன்று ஐரோப்பியரும் யார்?

______________________________

______________________________

2. போர்த்துக்கேயர் எத்தகையவர்கள்?

______________________________

______________________________

3. சிறீலங்காவையும் தமிழீழத்தையும் ஒன்றாக இணைத்தவர்கள் யார்?

______________________________

______________________________

4. போர்த்துக்கேயர் இடித்த புகழ்பெற்ற கோவில் எது?

______________________________

______________________________

5. மூன்று ஐரோப்பியரிலும் யாரால் எமக்கு அதிகக் கேடு விளைந்தது?

______________________________

______________________________

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா - ஐந்திற்கும் முழுவிடை தருக.

1. கார்காலத்தில் பூத்ததாகக் கவிஞர் கூறும் பூக்களின் பெயர்களைத் தருக.

2. வன்னிமண்ணின் வீரம் மிகுந்த இரு மன்னர்களின்? பெயர்களைத் தருக.

3. அதியர்மான் தான் உண்ணாமல் நெல்லிக்கனியை ஔவைக்குக் கொடுத்தது ஏன்?

4. காட்டுமல்லிகை? கவிஞர் எந்த உணர்வில் இப்பாடலை எழுதினார்?

5. மோர் தண்ணீராக உள்ளதை காளமேகம் எவ்வாறு நகைச்சுவையாகக் கூறுகிறார்?

(புள்ளிகள் 15)

**4 பாடலைப்படித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*தமிழே எங்கள் உயிராகும்*
*தாய்மண்ணே எங்கள் உடலாகும்*
*உடலும் உயிரும் இருந்தாலே*
*உலகில் நிலைத்து வாழ்ந்திடலாம்*
*எங்கள் தாயகம் தமிழீழம்*
*ஏதிலி மண்ணாய் ஆகுவதோ?*
*எதிரியின் கொடுமை கண்டஞ்சி*
*ஏங்கி அஞ்சி வாழ்வோமோ*
*மண்ணுக்காக வாழ்ந்த எங்கள்*
*மாவீரர் தம்மை வணங்கிடுவோம்*
*மாவீரர் நாளை மனத்திருத்தி*
*மலரும் தமிழீழ நாள் நோக்கி*
*மாற்றம் ஒன்றைப் படைத்திடுவோம்*
*மனதிற் கொள்வோம் இதைநாளும்*

1. யாரை நாம் வணங்க வேண்டும்?

___________________________________________

___________________________________________

2. நாம் எதை நாளும் மனதிற் கொள்ள வேண்டும் என்கிறார் கவிஞர்?

___________________________________________

___________________________________________

3. தமிழர் மனத்திருத்த வேண்டிய நாள் எது?

___________________________________________

___________________________________________

4. எங்கள் உயிரும் உடலுமாக இருப்பவை எவை?

___________________________________________

___________________________________________

5. இப்பாடலிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது என்ன?

___________________________________________

___________________________________________

(புள்ளிகள் 05)

## 5) இலக்கண / மொழியியல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

1. இடைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? அவற்றுள் கால இடைநிலைகளை விளக்குக.

______________________________

______________________________

2. அமைப்பு அடிப்படையில் சொல்லிய வகைகளைத் தருக.

______________________________

______________________________

3. வேற்றுமை வகைகளைத் தந்து, அவற்றுள் ஒன்றை விளக்குக.

______________________________

______________________________

4. கலப்புச் சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

______________________________

5. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

| | |
|---|---|
| 1. கேளிர் ______________ | 4. கார்காலம் ______________ |
| 2. மலிந்தன ______________ | 5. வைதல் ______________ |
| 3. ஆசுகவி ______________ | 6. ககனம் ______________ |

(புள்ளிகள் 15)

6. பந்தியை வாசித்து உமது வாழிட மொழியில் மாற்றி எழுதுக.

ஒரு மன்னனும் ஒரு புலவரும் நல்ல நண்பர்கள். ஆனால், ஒருவரையொருவர் நேரில் கண்டதில்லை. மன்னன் இறக்கும் தறுவாயில், புலவரைக் காண விரும்பினான். புலவர் தன்னைக் காண வருவாரெனக் காத்திருந்தான். புலவரும் மன்னனைக் காணும் ஆவல் மேலிட்டு, தலைநகருக்குச் சென்றார். ஆனால், அவர் போவதற்குள் மன்னன் உயிர் பிரிந்துவிட்டது. அச்செய்தி கேட்ட புலவர் அக்கணமே உயிர்விட்டார். இருவரும் சிறந்த நட்புக்கு எடுத்துக்காட்டு ஆனார்கள்.

(புள்ளிகள்05)

**7. கீழ்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து, நூற்றைம்பது சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. **காளமேகமும் மோரும்**
2. **வன்னி மன்னன் பண்டாரவன்னியன்**
3. **வன்னிமக்களின் அவலங்கள்**
4. **இனிய பூம்பனிக்காலம்**

(புள்ளிகள் 20)